**இலங்கை முதலீட்டுச் சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை முதலீட்டுச் சபையின் (“சபை”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டுச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடம் இருந்து கிடைக்க வேண்டிய வருடாந்தக் | சகல நிலுவைப் பணத்தையும் சேகரிக்கும் செயற்பாடுகள் நிதிப்பிரிவினால் எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிலுவைப் பணம் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளுக்காக சபையின் | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணம், நில வாடகை, கட்டிட வாடகையை உள்ளடக்கிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 1,843,503,223 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முன்னைய ஆண்டின் நேரொத்த தொகையுடன் ஒப்பிடும் போது 25 சதவீத அதிகரிப்பு ஒன்றை பிரதி நிதித்துவப்படுத்தின்றது. இதனால் ரூபா 383,815,599 தொகை நான்கு வருடம் முழுவதும் நிலுவையாகக் காணப்பட்டது. சபையின் காணியில் காணப்படுகின்ற தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 777,003,690 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 314,827,372 அதாவது 41 சதவீதம் ஒரு தொழில் முயற்சியாளருக்கு உரியதாகக் காணப்பட்டது. மேலும் வியாபார செயற்பாடுகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ள 419 முதலீட்டாளர்களிடம் இருந்து நில வாடகை, வருடாந்த கட்டணம் மற்றும் கட்டிட வாடகையான ரூபா 292,308,353 நிலுவையாகக் காணப்பட்டது. | மேற்பார்வை நடவடிக்கை பிரிவு மற்றும் சட்டப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இந்த நிலுவைப் பணத்தை தீர்த்து வைப்பதற்காக எந்த ஒரு வைப்பு ஒன்றும் காணப்படாது இருந்தமையால் மற்றும் நிலுவைப் பணம் சேகரிப்பதற்காக பல்வேறு செயற்பாட்டு நடவடிக்கைகளும் பின்பற்றப்பட்டதன் பின்னர் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களில் இருந்து அறவிட முடியாத பணத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் முதலீட்டுச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடம் இருந்து கிடைக்க வேண்டிய வருடாந்தக் கட்டணத்திற்காக இழப்பீட்டிற்கான ஏற்பாடு ரூபா 356,283,938 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 350,318,468 ஆன பெறுமதி ஒன்று மூலதன நட்டம் ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | வருடாந்த கட்டணத்திற்கான நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய நிலுவை நானாவித வருமானத்தின் அளவு ரூபா 58,471,296 ஆக இருந்ததுடன் அதில் ஒரு தொழில் முயற்சிகளிடம் இருந்து | இந்தப் பிரச்சனைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு (JEDB) ஆலோசனை வழங்குமாறு நிதி | ஐந்து வருடங்கள் முழுவதும் செலுத்த வேண்டிய மீதியை அறவிடுவதற்கு உடனடியாக |

| | | |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய தொகையான ரூபா 37,412,573 ஐந்து வருடங்கள் முழுவதும் அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்பட்டது. | அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தால் (நிறுவன அலுவல்கள் பிரிவு) பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ள பிரகாரம் கடனைத் தீர்த்து வைப்பதற்காக காணி ஒன்றைக் கைப்பற்றும் போது உரிய பெறுமதிக்கு சமமான வகையில் காணி ஒன்றை கைப்பற்றுதல் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் பணிகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்த முடியுமாக இருந்ததை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு செலவினம் ரூபா 154,723,217 ஆக இருந்ததுடன் இதில் சட்ட ரீதியான மற்றும் தொழில் தகைமைக் கட்டணத்திற்கு உரிய ரூபா 18,715,705 தொகை இரண்டு வருடங்கள் முழுவதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் சட்டப் பிரிவின் தகவல்களின் அடிப்படையாகக் கொண்டு சட்ட ரீதியன மற்றும் தொழில் தகைமை சேவைக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. எனினும் செலுத்துதல் முன் கொண்டு செல்வதற்காக செலுத்துவதற்குரிய அங்கீகாரம் காணப்படவில்லை. இந்தப் பிரச்சனைகள் 2025 ஆம் ஆண்டில் தீர்க்கப்படுவதுடன் தீர்மானத்தின் அடிப்படையில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அட்டுறு செலவினங்கள் உரிய கால எல்லையில் தீர்த்து வைக்க வேண்டி இருந்ததுடன் உரிய அதிகார தரப்பினரின் அங்கீகாரத்துடன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் உடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (அ) பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க சபையினால் பொதுக் கழிவு நீர் சுத்திகரித்தல் (CWWTP) உள்ள சகல வலயங்களுக்காகவும் செல்லுபடியான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் ஒன்று (EPL) பெறுதல் வேண்டும். எனினும் சபையின் 8 | 1992 ஆம் ஆண்டு முதல் பெயர் குறிப்பிடப்பட்ட வலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் (CEA) புரிந்துணர்வு ரீதியில் இணங்கப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் (EPLs) நேரடியாக விநியோகிக்கப்பட்டதுடன் அதற்காக | தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு இணங்க குறித்துரைத்த திகதியில் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வலயங்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணக்கப்பாடு தேவைப்படவில்லை.<br><br>சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக அவர்களின் இணக்கப்பாடு தேவையாக இருந்தது என தற்போது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் முதலீட்டுச் சபை மற்றும் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) ஊடாக அந்த நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2025 ஏப்ரல் 28 ஆந் திகதி முதலீட்டு சபை மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கை கலந்துரையாடப்பட்டதுடன் தற்போது அவர்களின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 1992 இன் 49 ஆம் இலக்க பெரும்பாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட 20 (அ) பிரிவு | தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் அல்லது பணிகள் அல்லது இலக்குகள் எதுவும், அந்த சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் விசாரணை செய்து (CEA) மற்றும் அந்த அதிகார சபையின் இணக்கப்பாட்டுடன் அன்றி சபையினால் செயற்பாட்டுக்கு கொண்டு வருதல் அல்லது செயற்படுத்தல் நிறைவேற்ற முடியாது. எனினும் 2025 மார்ச் 11 ஆந் திகதி வரையிலும் வலயம் / 10 பூங்காக்கள் அமுல்படுத்துகின்ற 210 தொழில் முயற்சியாளர்களுக்காக தேவையான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் | கட்டுநாயக்க, பியகம மற்றும் கொக்கல வலயங்கள் தவிர ஏனைய சகல வலயங்களிலும் அமைந்துள்ள சகல தொழிற்சாலைகளுக்காகவும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்காக முதலீட்டுச் சபையினதும், சுற்றாடல் அதிகார சபையினதும் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு முன் பெரும்பாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பத்திரம் விநியோகிப்பதற்கு முன் சபையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தேவையான இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை – அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூல் | | | |
| (i) | 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | பொதுத் திறைசேரியில் இருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டில் சபையினால் ஊழியர்களுக்காக ரூபா 453,747,557 படி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் ‘‘இலங்கை முதலீட்டுச் சபையின் படிகள், கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர் நலன் திட்டத்தை முறைமைப் படுத்துதல்’’ என்ற விடயங்கள் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் (பீஈடீ) பணிப்பாளர் நாயகத்தால் 2025 யூன் 23 ஆந் திகதிய இலக்கம் PED/P/BOI/3/6(i) என்ற கடிதத்தின் பிரகாரம் ஊழியர் ஊக்குவிப்பு படி உத்தேச திட்டத்தில் இறுதி வரைவு, சபையினால் அங்கீகாரத்திற்காக (பீஈடீ) இற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் | 2020 ஆம் ஆண்டு முதல் இந்த விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், திறைசேரியின் செயலாளர் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட போதும் இன்னும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. தற்போது முதலீட்டு சபையின் செயலாற்றை விருத்தி செய்யும் நோக்கில் எடுக்கப்பட்ட இரண்டு வருட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் விடயங்கள் தொடர்பாக விசேட நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் பிரதான பிரிவாக குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றல் முகாமைத்துவம் (Metric Basic Performance Management) அறிமுகப்படுத்தபடுவதுடன் அதில் முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபைக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு வருட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புப் படித் திட்டம் ஒன்றின் | சுற்றறிக்கை வழிகாட்டிகளுக்கு இணங்க திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அந்த ஆவணங்கள் 2025 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் (பீஈடீ) இற்கு வழங்கப்பட்டிருக்க வில்லை. | மூலம் விரிவாக செயலாற்றல் முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 6.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிக் கூற்றுக்கள், 79 நாட்கள் தாமதத்துடன் 2025 மே 19 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. | 2022 ஆம் ஆண்டு வரை சபையின் நிதிக்கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. IMAS முறைமையின் மூலம் செயலாற்றலை நிறைவேற்றுதல் தோல்வி அடைந்ததன் காரணமாக இந்த பரீட்சாத்தத்தை நடாத்திச் செல்வதற்கு பிரதான ரீதியில் தடையாக இருந்தது. 2024 யூன் மாதத்தின் போது Oracle முறைமை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் முறைமையை மேற்கொள்கின்ற தடை தீர்க்கப்பட்டிருந்தது. ஆறு மாதங்கள் முழுவதும் கைவிடப்பட்டிருந்த வேலைகள், அத் திகதியில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்படுவதுடன் தாமதம் இன்றி Oracle இற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. Oracle முறைமையில் இணக்க செயற்பாடுகள் மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பு தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. இதன் காரணமாக 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி பீஈடீ இலக்கம் 01/2024 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1 ஆம் பந்தி | ஊழியர் நலன் சங்கங்களுக்கு அல்லது மரணங்களுக்கான நன்கொடை, பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் மற்றும் அவ்வாறான சமமான | மரணச் சடங்குகளுக்கான உதவி வழங்குதல் சபையினால் அல்லாமல் சபையின் நிரந்தர ஊழியர்களான சகல அங்கத்தவர்களினதும் பங்களிப்புப் பணத்தை சேகரித்து செலுத்தப்படுகின்றது. பங்களிப்பு மரண உதவி திட்டத்தின் மூலம் | அந்த சுற்றறிக்கைக்கு முரணாக சபையின் நிதியம் மாற்றாது இருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய முறையிலான நலன்புரிகள் சார்ந்த செயற்பாடுகளுக்காக சபையின் நிதியம் மாற்றப்பட முடியாது. எனினும் அதற்கு முரணாக 2024 ஆம் ஆண்டில் ரூபா 5,205,120 தொகை மரண சடங்குகளுக்கான உதவியாக சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் அங்கத்தவர்களினதும் அவர்களின் வாழ்க்கை துணை, விவாகமாகாத பிள்ளைகள் மற்றும் அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகளின் பெற்றோர்கள் மரணமடைகின்ற போது உதவி வழங்கப்படுகின்றது. | |
| (ii) | 12.1 ஆம் பந்தி | சகல முறையிலும் அனுசரணைகள், நன்கொடைகள், நிறுவனம் சார்ந்த சமூகப் பொறுப்பு செலவினங்கள், தொழில் முயற்சிகள் சார்ந்தது அல்லாத மேம்படுத்தல் செலவினம் கைவிடப்பட்டிருக்கும் போது கண்டி எசல பெரகெரா இற்காக ஸ்ரீ தலதா மாளிகாவ ஊடக மற்றும் விசேட செயற்திட்ட பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் சபையினால் ரூபா 3,000,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | முதலீட்டு மேம்படுத்தல் இராஜாங்க அமைச்சரின் கோரிக்கையின் பிரகாரம் சனாதிபதி செயலாளரின் இணக்கப்பாட்டுடன் 2024 இல் கண்டி கண்டி எசல பெரஹெர இற்காக ஈடுபடுத்துவதற்காக ஸ்ரீ தலதா மாளிகாவ இற்கு ரூபா 3,000,000 தொகை நன்கொடை அளிப்பதற்கு சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அந்த அங்கீகாரம் மற்றும் கோரப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபை அந்த சுற்றறிக்கைக்கு இணங்குதல் வேண்டும். |
| (உ) | ஆலோசனை சேவை நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்தல் மற்றும் ஈடுபடுத்தல் தொடர்பான தேசிய பெறுகைகள் முகவராண்மை வழிகாட்டி – 2007 ஆகஸ்ட் இன் 3.2 மற்றும் 3.5 ஆம் பிரிவுகள் | போட்டியாளர் செயற்பாடுகள் ஊடாக அல்லது ஆலோசனை யாளர்களின் நீண்ட பட்டியல் ஒன்றை தயாரித்த பின்னர் ஆலோசனை செய்து நிறுவனங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எனினும் 2014 ஆம் ஆண்டின் போது பெறுகை செயற்பாடுகள் பின்பற்றப்படாமல் ஒன்றிணைந்த கணக்கீட்டு | சபையின் பரிந்துரையின் அடிப்படையில் ஒன்றிணைந்த கணக்கீட்டு முறைமைக்காக ஆலோசனையாளர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். புதிய முறைமை செயற்திட்டத்தை மேற்பார்வை செய்தல், பரிந்துரை செய்தல், அமுல்படுத்துதல் மற்றும் ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக E&Y அல்லது தகைமை பெற்ற ஏனைய பொருத்தமான ஆலோசனையாளர்களைத் தெரிவு செய்வதற்கு சபை 2013 யூன் மாதத்தின் போது அங்கீகாரம் | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க பெறுகை செயற்பாட்டின் ஊடாக ஆலோசனையாளர் தெரிவு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மென்பொருள் முறைமைக்காக ஆலோசனையாளராக ஒரு கம்பனி நியமிக்கப்பட்டிருந்தது. | வழங்கியிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,818,668,483 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,101,719,525 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 283,051,042 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிதி வருமானம் ரூபா 812,243,302 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 4 ஆம் இலக்க முதலீட்டு சபை சட்டத்தின் 3 (இ) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், மேம்படுத்தல், சபையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருந்ததுடன் செயற்திட்ட நிலைமை அறிக்கையின் பிரகாரம் வலயத்தில் மற்றும் அதன் வெளியே முதலீட்டு செயற்திட்டங்களுக்கு உரிய 2,707 உடன்படிக்கைகளில் கூட்டுமொத்தம் ஒன்று 1978 சனவரி 01 ஆம் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அமுல்படும் நிலையில் காணப்பட்டது. இந்த மொத்த உடன்படிக்கைகளுக்கு இடையே 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஐ.டொலர் 4,797.28 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுப் பெறுமதியுடன் 556 செயற்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் இந்த முதலீடு பெற்றப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்துவதற்காக சபையிடம் தகவல்கள் காணப்படவில்லை. | முதலீட்டுச் சபை பல்வேறு மூலங்களில் இருந்து தமது தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து பெற்ற முதலீட்டுப் பெறுமதி (வெளிநாட்டு / உள்நாட்டு) பின்வருமாறு சேகரிப்பட்டிருந்தது.<br>(i) ஆராய்ச்சிப் பிரிவில் புள்ளி விபரப் பிரிவினால் பேணிச் செல்லப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடு / உள்நாட்டு முதலீடுகளின் ஆய்வு.<br>(ii) மேற்பார்வை பிரிவினால் சேகரிக்கப்பட்ட இரட்டை வருடாந்த அறிக்கை ஊடாக பங்கு உரிமை தொடர்பான விபரம்.<br>(iii) ASYWORLD முறைமையில் இறக்குமதி தரவுகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு இறக்குமதிகள்<br><br>அதனால் முதலீடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமை தொழில் முயற்சியாளர்களுக்கு கிடைக்கின்ற பதிலின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்படுவதுடன் | அறிக்கையிடல் தேவை மற்றும் கால ரீதியிலான தகவல்கள் சமர்ப்பித்தல் முக்கியம் தொடர்பாக தொழில் முயற்சியாளர்களுக்கு சுட்டிக் காட்டுதல் மற்றும் உடன்படிக்கையை முடிவுறுத்தலை அறிவித்தல், அதன் மூலம் ஒட்டு மொத்த தரவுகளின் தரத் தன்மையை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில் முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களை பரீட்சித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தகவல்கள் நிரந்தரமாக நாளது வரையாக்கப் படுகின்றது. | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் சராசரியாக 19 செயற்திட்டங்களில் ரூபா 94,614,054 மற்றும் விசேட செயற்திட்டங்களில் ரூபா 228,956,908 மூன்று வருடங்கள் முழுவதும் பூர்த்தி செய்யப்படாத மூலதன வேலையாகக் காணப்பட்டதுடன் சபை இந்த செயற்திட்டங்களின் தற்போதய நிலைமை போதியளவாக மேற்பார்வை செய்திருக்கவில்லை. | பொதுவான செயற்திட்டங்கள் - நிர்மாண நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. இந்த செயற்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் இந்த தொகை மூலதனமாக்க முடியும்.<br>விசேட செயற்திட்டங்கள் - தேவையான சந்தர்ப்பங்களின் போது நிதி பதிவளித்தல் அல்லது மூலதனமாக்கல் நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிசொகுசு விலாக்கள் 40 இனை உள்ளடக்கிய ஹொட்டல் செயற்திட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக கம்பனி ஒன்றுடன் 2012 சனவரி 19 ஆம் திகதி சபையினால் மூலதன உடன்படிக்கை செய்யப்பட்டதுடன் அதில் ஆகக் குறைந்தது ரூபா 600,000,000 முதலீடு ஒன்று உள்ளடக்குதல் வேண்டும். இந்த செயற்திட்டம் 2012 சனவரி 19 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு 50 வருட காலத்தின் கீழ் கொக்கல வலயத்தில் அமைந்துள்ள 9.96 ஏக்கர் காணியில் மேற்கொள்ளவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2014 திசெம்பர் 15 ஆம் திகதி குறைநிரப்பு உடன்படிக்கை அமுல்படுத்தப் பட்டதுடன் அதன் மூலம் 55 அறைகளை உடைய ஹொட்டல் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக செயற்திட்ட விடயப் பரப்பு திருத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயல் திட்டத்தை அமுல்படுத்தும் காலம் 2015 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2018 மார்ச் 31 ஆம் | இணங்காமைகள் தொடர்பாக 2025 பெப்ரவரி 05 ஆம் திகதி கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகளுக்காக அவர்களின் பதில் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே காணியின் கட்டிடத்தின் பகுதிகள் அடகு வைக்கப்பட்டுள்ளமையால் உடன்படிக்கையை பூர்த்தி செய்தல் தொடர்பாக சட்டப் பிரிவில் மீளாய்வு கோரப்பட்டுள்ளது. | சபைக்கு வருமானம் ஒன்றை உழைத்துக் கொள்வதற்காக காணி மற்றும் கட்டிடங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை தொடர்ந்தும் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது. 2025 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரையில் முதலீட்டு அபிவிருத்தியில் கவனத்தில் கொள்ளக் கூடிய செயல் முன்னேற்றத்தை காண்பிக்காமையுடன் காணி மற்றும் கட்டிடம் விளைவற்று மற்றும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | | |
| (ஈ) | 2020 நவம்பர் 17 மற்றும் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானங்களின் பிரகாரம் இலங்கையில் உலக பிரசித்தி பெற்ற நவீன மயப்படுத்தப்பட்ட மருந்து வலயம் ஒன்றை ஸ்தாபித்தல், தனியார் முதலீடுகளைக் கவருதல், நேரடி வேலை வாய்ப்புக்கள் 2,000 மற்றும் மறைமுக வேலை வாய்ப்புக்கள் 1,000 ஐ உருவாக்குதல், மருந்து தொழிற்சாலைகள் 40 இனை ஸ்தாபித்தல் மற்றும் இறக்குமதிகளுக்கான வெளிநாட்டு இறக்குமதிகளுக்கான அந்நிய செலாவணி சேமிப்பை உள்ளடக்கிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அறபொக்கேயில் விசேட மருந்து உற்பத்தி வலயம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 2025 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையில் முதலீடு காணப்படாமை மற்றும் போதியளவான மேம்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தவறியதன் காரணமாக இந்த நோக்கங்கள் எதனையும் அடைந்து கொள்வதற்கு முடியாது இருந்தது. இந்த வலயத்திற்காக ஆரம்பத்தில் 400 ஏக்கர் அபிவிருத்தி செய்வதற்கு | 2020 ஆம் ஆண்டு அறபொக்க பிரதேசத்தில் பிரதேசபை கையளித்த 952 ஏக்கரில் 400 ஏக்கர் ஆரம்பமாக பெயர் குறிப்பிடப்பட்ட விசேட மருந்து வலயத்திற்காக இருந்ததுடன் அது 200 ஏக்கர் ஆனமையால் இரண்டு கட்டங்களில் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மருந்து முதலீடு ஸ்தாபிக்கப்படாமை, பின்னர் முதலீட்டு சபையினால் ஏற்றுமதி – பெற்றோலிய சுத்திரிப்பு ஒன்று மற்றும் அது சார்ந்த பொருட்களை ஸ்தாபிப்பதற்காக தனித்தொழில் முயற்சிகளுக்கான இரண்டாவது கட்டத்தில் முழுமையாக 200 ஏக்கர் மற்றும் I ஆவது கட்டத்தில் 200 ஏக்கரை உள்ளடக்கி 400 ஏக்கர் ஒதுக்கப்பட்டிருந்தது. மருந்து வலயத்தில் முதலாவது கட்டத்திற்காக 100 ஏக்கர் மாத்திரம் மீதப்படுத்தப்பட்டு முதலாவது கட்டத்தில் மேலும் 100 ஏக்கர் அந்த தொழில் முயற்சிக்காக ஒதுக்கப்பட்டு மாற்றம் செய்யப்பட்டமை மற்றும் முன்வந்த மருந்து முதலீட்டாளர்கள் காணப்படாமையின் காரணமாக தொடர்புபடுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடல் நடைமுறையில் மேற்கொள்ள முடியாது இருந்தமை.<br><br>அதனால் ஆரம்பத் தேவை மற்றும் முன்னுரிமைகளை கவனத்தில் கொண்டு மாத்திரம் முதலீட்டு சபை | முதலீட்டை கவருவதற்காக மற்றும் வலயத்தில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டக் கிரயமான ரூபா 2,560 மில்லியன் உடன் ஒப்பிடும் போது முதலீட்டு சபையினால் ரூபா 223.02 மில்லியன் மற்றும் ஏனைய அமைச்சினால் ரூபா 197.2 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மருந்து வலயத்திற்கான செலவினத்தின் ஒரு பகுதி (ரூபா 41.93 மில்லியன்) செலவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் முதலீட்டு சபை எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்ததுடன் முதலீடு அல்லது பொருளாதார நலன்களை உருவாக்குவதற்காக வலய நிலம் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி நிதியத்தை வழங்கி இருந்தது. | |
| (உ) | துணி உற்பத்திப் பிரிவில் போட்டி தன்மையை அதிகரித்தல், துணி உற்பத்தி பிரிவில் மூலப் பொருட்களின் தேவையை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தல், தனியார் முதலீடுகளை கவருதல், நேரடி வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் 10,000 மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்கள் 3000 ஐ உருவாக்குதல், துணிகளை இறக்குமதி செய்வதற்கான அந்திய செலாவணியை சேமித்தல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட துணிகளின் இறக்குமதி கிரயம் - வருடாந்தம் அமெரிக்க டொலர் 1,000 ஆகக் குறைத்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2020 நவம்பர் 17 ஆந் திகதி மற்றும் 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஏறாவூரில் துணி | கொவிட் - 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக மற்றும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது நிதி அமைச்சினால் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி இலக்கம் 03/2022 மற்றும் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய இலக்கம் 04/2022 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்தல் தொடர்பாக உள்நாட்டு நிதியத்தில் இருந்து பயன்படுத்தப்பட்ட செயல் திட்டங்களை அமுல்படுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதம் அடைந்து இருந்தது. வலயத்தில் தற்போது இருக்கின்ற முதலீட்டாளர்களுக்கு தேவையான சேவைகள் வழங்கப்படுகின்றது.<br>2026 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட பிரதான | முதலீடுகளை கவர்ந்து கொள்ளுதல் மற்றும் வலயத்தை ஸ்தாபிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி வலயம் ஒன்றை ஸ்தாபித்தல் தேவையாக இருந்தது. எனினும் 2025 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையில் ஒரு முதலீட்டாளர் மாத்திரம் மேற்கொண்டு இருந்ததுடன் பிரதான நோக்கங்கள் எதுவும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. முதலீட்டாள்களை கவருவதற்காக போதியளவான மேம்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான எந்த ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் பூர்த்தி செய்வதுடன் வலயத்தில் மிகுதி பிரதேசங்களில் புதிய முதலீட்டு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும், அமுல்படுத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றது. வலயத்தில் பயன்பாட்டை உச்ச அளவில் மேற்கொள்வதற்காக பொருத்தமான முதலீட்டாளர்களின் வலயத்தில் மேம்படுத்தல் நடவடிக்கைகள் தேவையாக உள்ளது. | |
| (ஊ) | திவுலப்பிட்டிய பிரதேசத்தில் வைப்பிட்ட பாம்மில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையுடன் அதில் 03 ஏக்கர் காணியைப் பயன்படுத்துவதற்காக எந்த ஒரு உடன்படிக்கையும் 2025 செப்தெம்பர் 12 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் இணங்கப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததா மற்றும் அதற்குரிய கால எல்லையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொள்வதில் பிரச்சனையாக இருந்தது. மேலும் வெடி பொருட்களை களஞ்சியப்படுத்தும் நோக்கத்தில் உள்ள இந்தக் காணி தற்போது அரச வியாபார கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்தக் காணியின் செயற்பாட்டு நடவடிக்கைகளைக் கொண்டு செல்வதற்கு உள்ள உரித்தை உறுதிப்படுத்தி அரச வியாபார கூட்டுத்தாபனம், சந்தைப்படுத்தும் சபை மற்றும் முதலீட்டு சபைக்கு இடையே எந்த ஒரு உடன்படிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | காணி ஆணையாளர் நாயகம் அவரின் 2011.01.25 ஆம் திகதிய கடிதத்தில் வைப்பிட்ட காணியில் இனங்காணப்பட்ட பகுதி ஒன்று நீண்ட கால வாடகை அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிப்பதற்கு சனாதிபதி செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தில் களஞ்சியக் கட்டிடங்கள் இரண்டு உள்ளதுடன் அதில் ஒன்று தற்போது நெல் சந்தைப் படுத்தும் சபையினால் அரச வியாபார கூட்டுத்தாபனத்திற்கு (STC) இரண்டு வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. வெடிக்கும் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக (STC) இனால் இந்தக் களஞ்சியம் பயன்படுத்தப்படுவதுடன அதில் வெடிக்கும் பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வாயிற் கதவிற்கு அருகில் பொலிஸ் காவலரண் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. | காணி மற்றும் கட்டிடத்தை பயன்படுத்தல் மற்றும் சபைக்கு வருமானத்தை உழைத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | வல்பிட்ட பாம் காணி கையேற்கும் கட்டளையின் பிரகாரம் அந்தக் காணி முதலீட்டு சபை அமுல்படுத்துகின்ற பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2003 சனவரி 08 ஆந் திகதி தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி இளைஞர் அலுவல்கள் நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக அண்ணளவாக 20 ஏக்கர் நில அளவு ஒதுக்கப்பட்டதுடன் முதலீட்டு சபையின் நோக்கங்களுக்கு இணங்க இலங்கை பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு அல்லது உள்நாட்டு முதலீடுகளை பெற்று அவ்வாறு எந்த ஒரு கருத்தும் காணப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்திற்காக ஒதுக்கப்பட்ட இந்த காணியை உள்ளடக்கிய கட்டிடம் முழுமையாகப் பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இளைஞர் அலுவல்கள் நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக முதலீட்டு சபையினால் 20 ஏக்கர் 17.72 பேர்ச் காணி 30 வருட வாடகை அடிப்படையில் வருடம் ஒன்றுக்கு மொத்த காணிக்காகவும் ரூபா 5,796 பெயரளவு நில வாடகை பெறுமதியில் தேசிய இளைஞர்கள் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை 2003 சனவரி 08 ஆந் திகதி அமுல்படுத்தப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிடம், பொருளாதார ரீதியில் மற்றும் செயற்திறனாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வழங்கப்பட்ட நில வாடகை எண்ணக் கருவின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான உரு வலயத்திற்கான ஏக்கருக்கு நில வாடகை, தொழில் முயற்சி நிறுவனம் ஒன்றில் இருந்து ஒன்றுக்கு ஒன்று வேறுபாடான முறையில் அறவிடப்பட்டிருந்தது. மேலும் ஏற்றுமதி தயாரிப்பு வலயங்கள் அல்லது தொழில் நுட்ப பூங்காக்கள் சிலவற்றில் தொழில் முயற்சிகளுக்காக 2022 | சகல வலயங்களுக்கும் வர்த்தமானி பிரகாரம் புதிய காணி விநியோகிப்பதற்கான வருடாந்த நில வாடகை ஆகக் குறைந்த கேள்வி விகிதாசாரத்திற்காக ஈடுபடுத்தும் நோக்கத்திற்கு உரியதாகும். கேள்விப் பெறுமதியின் அடிப்படையில் தொழில் முயற்சி நிறுவனங்களுடன் கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் | வர்த்தமானி அறிவித்தல் அல்லது உடன்படிக்கைகளுக்கு இணங்க நில வாடகை விகிதம் பகுப்பாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சனவரி 01 ஆம் திகதிய இலக்கம் 2260/77 என்ற வர்த்தமானி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த மட்டங்களை விட குறைந்த விகிதத்தில் சபையினால் நில வாடகை அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அடிப்படையில் சகல பட்டியல்களும் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதனால் வர்த்தமானி விகிதம் மற்றும் பட்டியல் பெறுமதிகள் வேறுபாடாக இருக்க முடியும். மேலும் தொழில் முயற்சி நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட ஒவ்வொரு உடன்படிக்கையிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிபந்தனையின் பிரகாரம் செலுத்த வேண்டிய வருடாந்த நில வாடகை வேறுபட முடியும். அவ்வாறு உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் ஒவ்வொரு தொழில் முயற்சிகளுக்கான விகிதங்களை திருத்தும் காலம் 03 வருடம் முதல் 05 வருடங்கள் வரை மாற்றமடைந்துள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடங்கள் முப்பத்தாறு இற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. மேலும் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடங்களில் இருந்து எட்டு நிறுவனங்கள் அவர்களின் வாடகை உடன்படிக்கையை செல்லுபடிக் காலத்தை நீடிக்காமல் கட்டுநாயக்க வலயத்தில் கட்டிடங்கள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சட்ட ரீதியான உடன்படிக்கை அமுல்படும் வரை கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்பட்ட பின்னர் கையளித்தல் கடிதத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஆரம்பத் திகதியில் கட்டிடத்தைக் கைப்பற்றுதல் மற்றும் மாதாந்த வாடகை செலுத்துவதற்காக வாடகையாளரால் சட்ட ரீதியாக பொறுப்புடையவராக இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம; KEPZ இல் நிதிப் பிரிவினால் மாதந்த பட்டியல் விநியோகிக்கப்படுகின்றது. உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சகல கையளித்தல் கடிதமும் சபையினால் அங்கீகாரத்திற்காக மற்றும் ஒவ்வொன்றினதும் செல்லுபடியாக்குவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. COVID – 19 தொற்றுநோய் மற்றும் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக நிலுவைப் பணம் | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு கால ரீதியில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தாமதம் அடைந்து இருந்ததுடன் வாடகையாளர்களுக்கு சலுகை வழங்குவதற்கான விகிதாசார குழு ஒன்று அங்கீகாரத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அநேகமான வாடகையாளர்களால் அவர்களின் நிலுவைத் தொகையில் 75 சதவீதத்திற்கு மேல் செலுத்தப்பட்டுள்ளது. எனினும் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது கட்டிடத்தை மீண்டும் முதலீட்டு சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (இ) | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நேர் வெளிநாட்டு முதலீட்டுக்காக இலக்கிடப்பட்ட தொகை அ.டொலர் 1,304.7 மில்லியனாக இருந்த போதும் கிடைக்கப் பெற்ற முதலீடு அ.டொலர் 612 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் அடையப்பட்டிருந்த இலக்கு 47 சதவீதம் ஆகும். மேலும் 2022 ஆம் ஆண்டின் போது அ.டொலர் 1,076 மில்லியன் ஆன நேரடி வெளிநாட்டு முதலீடு 2024 ஆம் ஆண்டு வரையில் அ.டொலர 612 மில்லியன் வரை குறைவடைந்து இருந்ததுடன் அது 43 சதவீத வீழ்ச்சி காட்டியது. | 2024 ஆம் ஆண்டின் போது நேரடி வெளிநாட்டு முதலீடு பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக ஒரே ஆண்டில் நடைபெற்ற தேசிய தேர்தல் இரண்டினால் ஏற்பட்ட அரசியல் நிச்சயமற்ற நிலைமை ஆகும். இந்த எதிர்வு கூற முடியாத சூழல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வெற்றி கொள்ள முடியாது இருந்ததுடன் மூலதனம் உள்வருதல் மெதுவான நிலையில் காணப்பட்டது. அதன் விளைவாக சில முதலீடுகள் இலக்கிடப்பட்ட மட்டங்களை விட கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் அதிகரித்து இருந்தது. | நேரடி வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையினால் வழங்கப்பட்ட செயற்திட்ட நிலமை அறிக்கையின் பிரகாரம் செல்லுபடியான உடன்படிக்கை காணப்பட்ட போதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 63 தொழிலில் முயற்சிகள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தி இருந்தமை அவதானிக்கப்பட்டது. மூடப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்களில் இருந்து கிடைக்கப் பெற்ற மொத்த முதலீடு அ.டொலர் 0.024 | உரிய கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில், காணிப் பிரச்சனைகளின் அடிப்படையில் அல்லது நீதிமன்ற வழக்குகள் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கம்பனி மூட வேண்டி இருந்தது. மேலும் அந்த பட்டியலில் உள்ள ஏதாவது செயற்திட்ட உடன்படிக்கை (63 தொழில் முயற்சிகள்) நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக சில கம்பனிகளில் சில விரிவுபடுத்தல் செயற்திட்ட | உடன்படிக்கைகளுக்கு உரிய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கும் நிலைபேறான முதலீட்டுக் கவர்ச்சினையும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் மாத்திரம் ஆகும். அவ்வாறே இந்த தொழில் முயற்சியாளர்களிடம் இருந்து மதிப்பிடப்பட்ட வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை 13,285 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 2,687 மாத்திரம் ஆகும். இதனால் இந்த உடன்படிக்கைகளுக்கு உரிய பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு போதியளவான நடவடிக்கை எடுப்பதற்கு சபை தவறியிருந்தமையும் வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை உருவாக்குகின்ற நிலை பேறான முதலீட்டு கவர்ச்சியினை மேற்கொள்வதற்கு தவறி இருந்தமையையும் சுட்டிக் காட்டுகின்றோம். | அலகு மூடப்பட்டிருந்த போதும் அவற்றின் பிரதான செயற்திட்ட அலகு தொடர்ச்சியாக அமுல்படும் நிலையில் காணப்பட்டது. | |
| (உ) | 2024 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தில் செயல் முன்னேற்ற அறிக்கையின் படி திட்டமிடப்பட்ட 184 செயற்பாடுகளில் 86 செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைத் திட்டத்தை அமுல்படுத்தும் செயல் முன்னேற்றம் 46 சதவீதம் மாத்திரம் ஆகும். | ஆரம்ப பெறுகைத் திட்டம் மற்றும் திருத்தப்பட்ட பெறுகைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட மொத்த பெறுகைகளில் 2024 ஆம் ஆண்டில் 86 பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பெறுகைத் திட்டத்தை கால ரீதியிலும் செயற்திறனான முறையிலும் அமுல்படுத்துதல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதலீட்டு சபையின் வலய மற்றும் 13 பூங்காக்களில் 1,833.69 ஏக்கர் காணி அளவு வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக வலயம் மற்றும் பூங்காக்களுக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள வலயத்தில் இல்லாத 785.11 ஏக்கரும் வெறுமையாகக் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டிருந்தது. அதன் | முதலீட்டாளர்களுக்கு இடையே வெற்றுக் காணியை மேம்படுத்துவதற்காக சபை தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கின்றது. | முதலீட்டாளர்களுக்கு இடையே வெற்றுக் காணியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரகாரம் மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான காணி 2,618.8 ஏக்கர் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. பிரதானமாக பிங்கிரிய கட்டம் II, சூரியவெவ மற்றும் அம்பாந்தோட்டை வலயங்களில் காணப்படுகின்ற இந்த வெற்றுக் காணிகளில் கவனத்தில் கொள்ளக் கூடிய பகுதி ஒன்று பயன்படுத்தப்படாது காணப்பட்டமை விசேடமாகக் காண்பிக்கப்பட்டதுடன் அதில் சபைக்கு எந்த ஒரு வருமானம் உழைப்பதற்கோ அல்லது நாட்டிற்கு எந்த ஒரு பொருளாதாரப் பெறுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கோ முடியாது இருந்தது. அதன் பிரகாரம் நாட்டின் நலன்களுக்காக சபை தமது காணியை ஆக்கபூர்வமான முகாமைத்துவம் செய்வதற்கு தவறி இருந்தமை அவதானிக்கப்பட்டது.